# இதுதான் கலைஞரின் டானிக்!



ஜூன் 3 - சூல் கொண்ட சூரியன் தமிழினத் தலைவர் - முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள். இது 103 ஆவது பிறந்த நாள். இது தனிமனிதனின் பிறந்த நாள் அல்ல. ஒரு தலைவரின் பிறந்தநாள். ஒரு தத்துவத்தின் பிறந்தநாள். கோடிக்கணக்கான தமிழர்களை தலை நிமிர வைத்த நெம்புகோலின் பிறந்தநாள். உணர்ச்சியால் சூடாக்கிய சூரியனின் பிறந்தநாள். இலக்கியத்தால் குளிர வைத்த தமிழ்நிலவின் பிறந்தநாள். அவர் மறையவில்லை. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும் மாமனிதரின் உருவில் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்.

**பெரியாரையும் அண்ணாவையும் நினைவூட்டும் நிழலாக கலைஞர் இருந்தார். அந்த மூவரையும் நினைவூட்டும் நம்பிக்கையாக இன்றைய தலைவர் இயங்கி வருகிறார். பெரியாராக இருந்தாலும் அண்ணாவாக இருந்தாலும் கலைஞராக இருந்தாலும் விதையை அடுத்த நூறு ஆண்டுகளுக்கும் சேர்த்து விதைத்துச் சென்றவர்களே தவிர, தன்னோடு அனைத்தையும் முடித்துக் கொண்டவர்கள் அல்ல. அவர்கள் விதைத்த விதைகளுக்குள் இருப்பது திராவிடப் பெருநெருப்பு. தமிழ் உயிர்த் துடிப்பு. இரண்டுக்கும் எப்போதும் அழிவில்லை. அதனை அழிக்க நினைத்தவர்கள் புதைக்கப்பட்ட இடத்துக்கு முகவரிகள் கூட இருக்காது. அதுவே முழு உண்மை.**

வயது முதிர்ச்சியின் காரணமாக கலைஞர் அவர்கள் கோபாலபுரத்தில் ஓய்வு எடுத்தபோது, நினைவாற்றல் கூட குறைந்து வந்தது. அப்போதும் எழுதச் சொன்னால், '**அண்ணா**' என்று எழுதினார் என்பது அனைவர்க்கும் தெரியும். நான் இப்படித்தான் இருப்பேன் என்பதை 1976 ஆம் ஆண்டு கலைஞர் எழுதி இருக்கிறார் என்பதைப் படித்த போது அதிர்ச்சியாக இருந்தது.

6.1.1976 'முரசொலி'யில் கலைஞர் எழுதுகிறார்: "**மரணப்படுக்கையில் என் நாக்கு அசையும் சக்தியை இழந்துவிடுமானால் என் நெஞ்சத் துடிப்புகள் கழகத்தின் பெருமைக்குரிய கொள்கைகளை ஒலித்துக் கொண்டே இருக்கும். அம்மா, அப்பா என்று சொல்லி என் உயிர் பிரியப் போவதில்லை. அண்ணா, அண்ணா என்று சொல்லித் தான் இந்த உயிர்த்துடிப்புகள் இறுதியாக அடங்கும்**" என்று எழுதி இருக்கிறார் கலைஞர். 1976 ஆம் ஆண்டு எழுதியது தான் 2018 இல் நடந்தது. இதுதான் சாதாரண மனிதனுக்கும் இலட்சியவாதிக்கும் உள்ள வேறுபாடு. இலட்சியவாதி, தனது கொள்கைகளை மட்டுமல்ல; நடத்தைகளையும்தான் நினைப்பதைப் போலவே தீர்மானிக்கும் சக்தி படைத்தவன்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா மறைந்த போது, '**இரவலாக இதயத்தைத் தந்திடண்ணா, நான் வரும்போது கொண்டு வந்து உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா**' என்பது உச்சகட்ட கற்பனைக் கவி வரிகள். கடற்கரையில் அண்ணாவுக்கு அருகில் கலைஞருக்கும் இடம் பெற்றுத் தந்ததன் மூலம் மெய்ப்பித்தார் திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின். இவை வரலாறு மட்டுமல்ல. வரலாற்றின் பெருமைகள் ஆகும்.

கலைஞர், பல வெற்றிகளை உருவாக்கித் தந்தவர். தோல்விகளில் இருந்து மீட்டுத் தந்தவர். அவரது வாழ்க்கையே இன்று நமக்கு வழிகாட்டியாக இருக்கிறது. நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கழகம் ஆட்சி அமைக்கும் அளவுக்கு வெற்றியைப் பெற முடியாமல் போயிருக்கலாம். ஆனால் கழகம் இருக்கிறது. அந்தக் கழகம், அடுத்து வெற்றியைப்பெற்றுத்தரும்வலிமையோடுதான் இருக்கிறது. தொண்டர்களும் அதே வலிமையோடுதான் இருக்கிறார்கள்.

'ஆளும் கட்சியாக இருக்கும் போது தி.மு.க.வுக்கு 30 பேர் தான் அமைச்சர்கள். எதிர்க்கட்சியாக இருக்கும் போது தி.மு.க.வின் ஒவ்வொரு தொண்டனும் அமைச்சர் தான்' என்று எதிர் முகாமைச் சேர்ந்த ஒருவர் இணையத்தில் பேட்டி அளித்துள்ளார். "**தொலைவில் வெடிச் சத்தம் கேட்கிறது. காது அதிர்ச்சி அடைகிறது. அதற்காக காது கீழே விழுந்து விடுவது இல்லை. அப்படித்தான் கழகமும்**" என்றவர் கலைஞர். காது கீழே விழாது. ஆனால் வெடிச்சத்தம் நெடு நேரம் நீடிக்காது. இத்தகைய சொற்களில்தான் கழகத்தின் உயிரும் இருக்கிறது. உடன்பிறப்புகளின் உயிரும் இருக்கிறது. **இதுதான் கலைஞரின் டானிக்.**

மலையில் உருட்டினாலும், விஷம் கொடுத்தாலும் பிரகலாதன் பிழைத்துக் கொள்வது புராணமாக இருக்கலாம். ஆனால் இதுதான் தி.மு.க. உடன்பிறப்பின் வாழ்க்கையும். கட்சி பெரிது என்று வாழும் கூட்டத்தை உருவாக்கியவர் கலைஞர். அந்தக் கூட்டத்தைத் தக்க வைத்தவர் இன்றைய தலைவர்.

**ப.திருமாவேலன்**


கட்சி பெரிதா, ஆட்சி பெரிதா என்ற போது கட்சியைத் தலையாகவும் ஆட்சியை கிரீடமாகவும் சொன்னவரும் அவர்தான். '**தலை இருந்தால் கிரீடத்தை எப்போது வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். ஆனால் கிரீடத்தை மட்டும் வைத்துக் கொண்டு தலையைத் தேட முடியாது**' என்றார். இப்போது தலை என்னும் கட்சி இல்லாத கும்பலிடம் தான் கிரீடம் சிக்கி இருக்கிறது. அதனால்தான், 'ஆட தெரியாமல் தெரு கோணல்' என்று சொல்பவர் கையில் தமிழ்நாடு சிக்கி இருக்கிறது.


யார் கையில் ஆட்சி அதிகாரம் இருந்தாலும் மையப் பொருளாக தி.மு.க.வே இருக்கிறது. ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தமிழ்நாட்டின் நிரந்தர தலைப்புச் செய்தியாக தி.மு.க.வை ஆக்கி வைத்தார் கலைஞர். இன்றும் பலமுனைத் தாக்குதலில் தி.மு.க. இருக்கிறது. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தாக்கப்படுகிறார். எதிரிகளும் தாக்குகிறார்கள். பழைய நண்பர்களும் தாக்குகிறார்கள். தாக்குதலினால் ஏற்படும் பயனும் தி.மு.க.வினால் கிடைப்பது தானே? தலைவரால் அவர்களுக்குக் கிடைத்ததுதானே?

இப்போது கலைஞர் சொல்லே நினைவுக்கு வருகிறது. "**இராமன், அயோத்தியில் இருந்தவரை இராமாயணம் இராமனைச் சுற்றியே எழுதப்பட்டது. இராமன் காட்டுக்குப் போன பிறகு பரதனைச் சுற்றி எழுதவில்லை இராமாயணம். இராமாயணம் எழுதிய வால்மீகியும், கம்பனும், துளசிதாசரும் காட்டுக்குப் போய் விட்டார்கள். அதைப்போலவே கழகத்தைச் சுற்றியே அனைத்தும் நடக்கிறது**" என்றார் கலைஞர். **இதுதான் கலைஞரின் டானிக்!**

அவரது சொல்லை ஆயுதமாக்கி வெல்வோம்!

# கலைஞரின் படைப்பாற்றல் !





திராவிட இயக்கத்தின் முதல் அரசியல் அமைப்பான நீதிக்கட்சியின் தளகர்த்தராகத் திகழ்ந்தவர் ஏ.டி. பன்னீர்செல்வம். இந்தி ஆதிக்க எதிர்ப்பு, சமஸ்கிருதத் திணிப்பு முறியடிப்பு எனத் துணிச்சல் மிகுந்த செயல்பாடுகளை மேற்கொண்டவர். பெரியாருடன் இணைந்து நின்று இயக்கத்தைக் கட்டிக் காத்தவர். பிரிட்டிஷ் ஆட்சியில் 1940ஆம் ஆண்டு லண்டனில், இந்திய விவகாரத் துறை அமைச்சருக்கு ஆலோசகராகப் பணியாற்ற ஏ.டி.பன்னீர்செல்வத்துக்கு வாய்ப்பு கிடைத்தது. அந்தப் பொறுப்பை ஏற்பதற்காக அவர் லண்டன் சென்றபோது, அவர் பயணித்த ஹனிபால் விமானம் ஓமான் நாட்டுக் கடலில் விழுந்து மூழ்கியது. பன்னீர்செல்வம் மறைவெய்திய செய்தி இந்தியாவை எட்டியபோது பெரியார் கலங்கினார். உருக்கமிகு இரங்கல் அறிக்கை எழுதினார். அண்ணா கவலையுற்றுக் கட்டுரை எழுதினார். அப்போது 16 வயதே ஆன கலைஞர் எழுதிய இரங்கல் கவிதையில் அவரது கொள்கை உணர்வும் படைப்பாற்றலும் சேர்ந்து வெளிப்பட்டன.

கிழக்கினில் கிளம்பிய காலைக் கதிரவன்
வெடுக்கென வீழ்ந்தான் கடலில் என்றால்
வையம் கலங்காதோ? வாடி வதங்காதோ?

இருள் நீங்கி ஒளி பெறவே முந்துங்கால்
மருள் சூழ்ந்த சாவு மேகம்
இளங்கதிரை மறைத்ததுவே!

பன்னீர்செல்வமே..
பசியேறிய வெறிக் கடலின் பாழலைகள்
ஓய்ந்தனவா உன்னைத் தின்று?

கோமானே! யாம் அழுதழுது உகுத்த கண்ணீர்
ஓமான் கடல் ஆயிரத்தை வெற்றி கொள்ளும்.....

-எனத் தொடர்ந்து செல்கிறது அந்தக் கவிதை.

1952ஆம் ஆண்டு கலைஞரின் எழுத்தோவியத்தில் வெளியாகி, தமிழ்த் திரையுலகில் திருப்புமுனை ஏற்படுத்திய **பராசக்தி** படத்தில், கல்யாணிக்கு குழந்தை பிறக்க இருப்பது பற்றி குடும்பத்தினர் பேசிக்கொள்வார்கள். அப்போது, பையன் பிறந்தால் பேரு, பன்னீர்செல்வம். பொண்ணு பிறந்தால், நாகம்மை என்று முடிவு செய்வார்கள். கல்யாணிக்கு குழந்தை பிறக்கும். என்ன குழந்தை என்று தெரிந்துகொள்ள காத்திருப்போரிடம் அந்தக் குடும்பத்துப் பெண்மணி, "பையன் பிறந்திருக்கான். பன்னீர்செல்வம் பிறந்திருக்கான்" என்று சொல்வார்.

ஏ.டி.பன்னீர்செல்வம் இறந்து 12 ஆண்டுகள் கடந்த நிலையிலும், அவர் பெயரைத் தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில், கதையில் வரும் குழந்தைக்குப் பெயர் வைத்தவர் கலைஞர் எனும் படைப்பாளி.

**கோவி.லெனின்**
**ஆலோசகர், கழக தகவல் தொழில் நுட்ப அணி**



## முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாள்!

# தேனி வடக்கு மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் - உணவு வழங்கல்!

## மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் அறிவிப்பு!



தேனி, ஜூன் 3

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தேனி வடக்கு மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

இது குறித்து தேனி வடக்கு மாவட்ட கழகச்செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்பி. அறிவிப்பு வருமாறு:-

05.06.2026 - போடிநாயக்கனூர், பெரியகுளம் - 03062026 அன்று அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்குதல். தேனி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன்.

05.06.2026 - வடபுதுப்பட்டி - அன்பு இல்லத்தில் மனவளர்ச்சி குன்றியோர்களுக்கு அசைவ உணவு வழங்குதல். பெரியகுளம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கே.எஸ். சரவணகுமார்.

03.06.2026 - வடுகபட்டி - வள்ளலார் மடத்தில் 300 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டியன்.

03.06.2026 - ஜங்கால்பட்டி - நலத்திட்ட உதவிகள், அரிசி, காய்கறிகள், வேஷ்டி, சேலை, வழங்குதல். தேனி வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.சக்கரவர்த்தி.

03.06.2026 - கெங்குவார்பட்டி - தூய்மைபணியாளர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். கெங்குவார்பட்டி பேரூர் செயலாளர் எஸ்.பி. தமிழன்.

03.06.2026 - பழனிசெட்டிபட்டி - 200 தூய்மைபணியாளர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். பழனிசெட்டிபட்டி பேரூர் மன்றத்தலைவர் மிதுன்சக்கரவர்த்தி.

03.06.2026 - பெரியகுளம் - 150 தூய்மைபணியாளர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல் மற்றும் இனிப்புகள் வழங்குதல். பெரியகுளம் நகர்மன்றத்தலைவர் சுமிதா சிவகுமார் மற்றும் பெரியகுளம் நகர செயலாளர் கே.எம்.முகமது இலியாஸ்.

03.06.2026 - வளையபட்டி - 200 நபர்களுக்குஅறுசுவை உணவு வழங்குதல். போடி கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.பி.அய்யப்பன்.

03.06.2026 - போடிநாயக்கனூர் - 200 தூய்மைபணியாளர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் வேஷ்டி, சேலை வழங்குதல். போடிநாயக்கனூர் நகர்மன்றத் தலைவர் ராஜராஜேஸ்வரி சங்கர் மற்றும் போடிநாயக்கனூர் நகரசெயலாளர் ஆர்.புருசோத்தமன்.

03.06.2026 - தர்மத்துப்பட்டி - ஏ.ஹட்ச்.எம்.ட்ரஸ்ட்இல் படிக்கும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு அறுசுவை உணவு வழங்குதல். போடிநாயக்கனூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.லட்சுமணன்.

03.06.2026 - புலிகுத்தி - ஆதரவற்ற முதியோர் காப்பகத்தில் உள்ளவர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் வேஷ்டி சேலைகள் வழங்குதல். சின்னமனூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் சி.முருகேசன்.

03.06.2026 - தேனி -150 தூய்மை பணியாளர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். தேனி நகர்மன்றத் தலைவர் ரேணுப்பிரியா பாலமுருகன் மற்றும் தேனி வடக்கு நகர் கழகச் செயலாளர் டி.பாலமுருகன்.

03.06.2026 - கோடங்கிப்பட்டி - மனிதநேய காப்பகத்தில் உள்ள 100 பேருக்கு அறுசுவை உணவு வழங்குதல். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.அஜிப்கான்.

இவ்வாறு தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. அறிவித்துள்ளார்.

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா! சைதை கிழக்கு பகுதி

# 170 ‘அ’ வட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள்!

## வட்டச் செயலாளர் கோ.சண்முகம் அறிவிப்பு!

சென்னை,ஜூன்.3-

ஜூன் 3ல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 170 ‘அ’ வட்டத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் விவரம் வருமாறு:-

தலைமை கோட்டூர் கோ. சண்முகம் வட்டகழக செயலாளர், 170 ‘அ’ வட்டம்

முன்னிலை: ஆர். ராஜ்குமார், மு. மகேஷ் லாரன்ஸ் கே.எம்.எஸ். கணேசன், S. கர்ணன், க. தாமோதரன், மு.பலராமன், ஏ. விக்டோரியா அன்பு, பா. சிவலிங்கம்.

நிகழ்ச்சிகளில் பங்கேற்போர்: மா.சுப்பிரமணியன் (மாவட்ட கழக செயலாளர் (முன்னாள் அமைச்சர்)

இரா.துரைராஜ், 10வது மண்டல குழு தலைவர் பகுத செயலாளர், (சைதை கிழக்கு)

1. வட்ட கழக செயலாளர் கோட்டூர் கோ. சண்முகம் அவர்களின் ஏற்பாட்டில் பள்ளிப்பட்டு சேவா சமாஜம் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மதியம் 12.00 மணிக்கு பிரியாணி வழங்கப்படும்.

2. சைதை கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோ. ராஜன் அவர்களின் ஏற்பாட்டில் பள்ளிப்பட்டு சேவா சமாஜம் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு காலை 8.00 மணிக்கு சிற்றுண்டி வழங்கப்படும்.

3. கழிக்குன்றம் பிள்ளையார் கோவில் தெருவில் பி.கே. சரவணன், எஸ். சுகுணா, எஸ். முத்துச் சோழன், எஸ். பரணி, எஸ். சியாமளா ஆகியோர் ஏற்பாட்டில் காலை 8.10 மணிக்கு கழக கொடியேற்றி காலை சிற்றுண்டி வழங்கப்படும்.

4. அறிஞர் அண்ணணா சாலையில் என். பாபு, க. தாமோதரன், ஜி.பழனி, வி.ரஜினி, கே.ராஜேஷ், எஸ்.கோகுல் ஆகியோர் ஏற்பாட்டில் கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு காலை 8.20 மணிக்கு சிற்றுண்டி வழங்கப்படும்.

5. ஆர்.எஸ். ஸ்ரீதர் சாலையில் IOB வங்கி முன்பு C. ரவி, கெ. வரதன், க. விஜயகுமார், ஆர்.இ. முரளி, வி. கந்தன். எஸ்.அனுப்ரியா, எஸ். ராஜாகுமார், எஸ்.உஷா நந்தினி ஆகியோர் ஏற்பாட்டில் பொது மக்களுக்கு காலை 8.30 மணிக்கு சிற்றுண்டி வழங்கப்படும்.

6. ஏரிக்கரை சாலை பீலியம்மன் கோயில் அருகில் ஆர்.நரசிம்மன், எஸ்.சக்கரபாணி, வி.அருள்ஜோதி, நெல்லை முருகேசன், சி.மாதவராஜ், சி.ராஜேஷ் கண்ணா ஆகியோர் ஏற்பாட்டில் காலை 8.45 மணிக்கு கழக கொடியேற்றி சிற்றுண்டி வழங்கப்படும்.

7. மேற்கு கால்வாய்கரை சாலை D பிளாக் முன்பு க. சுப்பிரமணி, கே. பழனி (சிஎல்ஆர்ஐ) எஸ். பாலாஜி, ஆகியோர் ஏற்பாட்டில் காலை 9 மணிக்கு கழக கொடியேற்றி சிற்றுண்டி வழங்கப்படும்.

8. கழிக்குன்றம் பிரதான சாலையில் சரண்யா டீ ஸ்டால் அருகில். க. ரகுநாதன், ஏ. சத்யா, எம். பவானி. ஆர்.மகேஸ்வரி, ஆர்.சிலம்பரசன், ஏ. அஜித்குமார் ஆகியோர் ஏற்பாட்டில் கழக கொடியேற்றி மதியம் 12.15 மணிக்கு பிரியாணி வழங்கப்படும்.

9. ஸ்ரீராம் நகர் பிரதான சாலையில் ஆர்.ரத்தினம், டி.துரைசெல்வம், டி.பிரகாஷ், டி.தனசேகர், ஆர்.தர்மராஜ், நூருல் அமீன் ஆகியோர் ஏற்பாட்டில் மதியம் 12.30 மணிக்கு கழக கொடியேற்றி அறுசுவை உணவு வழங்கப்படும்.

10. மேற்கு கால்வாய்கரை சாலை வட்டக்கழக அலுவலகத்தில் பா. சிவலிங்கம், எஸ். ஆல்பர்ட், ஏ.சேகர் ஆகியோர் ஏற்பாட்டில் மதியம் 12.45 மணிக்கு கழக கொடியேற்றி தலைவர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

11. மேற்கு கால்வாய் கரை சாலை F பிளாக் முன்பு P.V. சரவணன், கே.தனலட்சுமி, டி.கமலேஷ், ஆகியோர் ஏற்பாட்டில் மதியம் 1 நிகழ்ச்சியில் கழக கொடியேற்றி கலைஞர் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

12. மண்டபம் சாலை, ஏரிக்கரை சாலை சந்திப்பில் மு. ராமு, எஸ்.செல்வமணி, ஆர்.தேவராஜ், எம்.மகேஷ் குமார், எம். சுந்தர் ஆகியோர் ஏற்பாட்டில் மதியம் 1.10 மணிக்கு கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

13. கோட்டூர் சத்யா நகரில் டி.சுமதி, ஆர்.ராஜேஸ்வரி. எம். குமார், பிரேம் சந்தர், பி. பிரகாஷ் ஆகியோர் ஏற்பாட்டில் மதியம் 1.20 மணிக்கு அறுசுவை உணவு வழங்கப்படும்.

14. குருவப்பன் தெருவில் ப. தினகரன், பி.குமார், வி.தேவா, சி.ராஜசேகர், சி.நித்யானந்தம் ஆகியோர் ஏற்பாட்டில் மதியம் 1.25 மணிக்கு கழக கொடியேற்றி அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

15. திருவள்ளுவர் தெரு பகுதியில் கே.கோவிந்தராஜுலு, கே.சந்தானம், எஸ்.அருண். ஜி.புவன் ஆகியோர் ஏற்பாட்டில் மதியம் 1.30 மணிக்கு கழக கொடியேற்றி அறுசுவை உணவு வழங்கப்படும்.

இவ்வாறு வட்டச் செயலாளர் கோட்டூர் கோ.சண்முகம் தெரிவித்துள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு

கடலூர் மேற்கு மாவட்டம், கம்மாபுரம் கிழக்கு ஒன்றியம், இருப்பு ஊராட்சி, நாச்சிவெள்ளையன்குப்பம் கிளைக் கழகத்தைச் சேர்ந்த என்.ஆர்.தேவேந்திரன் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 600 018.
நாள் : 02,06.2026.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.